**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண்.07/2015

நாள்: 12.11.2025

பெயர்:சங்கர் (வா.சா.1)　　　　　த/பெ:பாலுசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>**

நான் கிரையம் வாங்கிய தாவா சொத்திற்கு அருகில் வீடுகள் இருந்ததா என்றால் வழக்கு தாக்கல் செய்யும் போது இல்லை. நான் தான் முதன் முதலில் கிரையம் வாங்கிய இடத்தில் வீடு கட்டினேன் அருகில் எந்த வீடும் இல்லை. நான் தான் அந்த ஏரியாவில் முதலில் வீடு கட்டினேன். நான் வீடு கட்டிய பின் வேறு யார் வீடு கட்டினார்கள் என்றால் 4 வருடமாக நான் அங்கு செல்லவில்லை அதனால் எனக்கு தெரியாது. தற்போதும் அந்த வீட்டிற்கு அருகில் யார் வசிக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. எத்தனை கழிகள் வைத்து வீடுகள் கட்டினேன் என்று தெரியாது. 2011ம் ஆண்டு கட்டினோம். அதனால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் கிரயம் வாங்கிய அந்த வீட்டில் 2011 ம் ஆண்டிலிருந்தே பிரதிவாதி வசித்து வருகிறார். 2014ம் ஆண்டு வீட்டை காலி செய்ய சொல்லி நான் வழக்கு தாக்கல் செய்தேன். நான் 2014ம் ஆண்டே வழக்கு தாக்கல் செய்துவிட்டேன். தாவா சொத்தை கிரயம் வாங்கியபோது ஒரு செண்ட் எவ்வளவு என்பது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. எந்த தேதியில் கிரயம் பேசினோம் என்று ஞாபகம் இல்லை. ஆண்டிமடம் பேருந்து நிலையம் அருகில் அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இடத்தில் பேசினோம். கலைவாணன், கணேசன், அறிவழகன் ஆகியோர் முன்னிலையில் மேற்படி இடத்தை கிரயம் பேசினோம். கிரயம் பேசி எவ்வளவு நாள் கழித்து எழுதினோம் என்றால் மூன்று மாதத்திற்குள் உடன்படிக்கை போட்டு எழுதிக்கொண்டோம். அந்த உடன்படிக்கையை பதிவு செய்தோமா என்றால் ஞாபகம் இல்லை. அந்த உடன்படிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒப்பம்/–சங்கர்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/– S. தனலெட்சுமி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்